## 17

### குடும்பம் ஆவியானவர் வாசம் செய்யும் ஸ்தலம் ...

# குடும்பத்திலுள்ள பொறுமை [நீடிய பொறுமை]

## [கலாத்தியர் 5:22, 23]

ஆவியின் கனியின் நான்காவது பண்பு பொறுமை, அல்லது நீடிய பொறுமையாகும். இந்த பாடத்தின் ஆய்வுப்பாடம் பொறுமை, இவை குடும்பத்தில் நீடித்த தன்மையை உருவாக்குவதற்கு உதவுகிறது.

நாம் நிலைத்த தன்மையை குறித்ததான செய்தியை ஆர்வமாக கேட்கவேண்டியது கட்டாயமாகும், ஏனென்றால் இன்றைக்கு குடும்பங்களில் - கிறிஸ்தவர்கள் மத்தியிலும் கூட அநேக நிலையில்லாத தன்மைகள் உருவாகிவிட்டன. நம்மை சுற்றி அநேக குடும்பங்கள் பிரிகின்றது, இதில் ஒருவர் அல்லது இருவரும் கிறிஸ்தவர்களாய் திருமணபந்தத்தில் இணைந்த போதிலும்!

நம்முடைய நோக்கம் விவாகரத்து ஆனவர்களை கடிந்து கொள்ளுவது அல்ல. மாறாக, திருமணம் ஆனவர்களுக்கு உதவி செய்வதை குறிக்கோளாக கொண்டு அல்லது ஒரு நாள் திருமணம் செய்பவர்களின் திருமணம் நீடித்திருப்பதற்காக உதவிசெய்தலே. நாம் எல்லாரும், நம்முடைய திருமணம் நீடித்திருந்தாலும் இல்லாவிட்டாலும், நாம் நிரந்தரமான திருமணத்தை உற்சாகப்படுத்துவதை ஆர்வமாக கொண்டிருக்க வேண்டும்.

எப்படி பொறுமையின் தன்மை குடும்பத்தில் நிலையான தன்மையை உருவாக்குவதற்கு உதவுகிறது? தவறு செய்கிறதான எந்த ஒரு மனிதனுடனும் வாழ்வதற்கு அது வழிவகுக்கிறது. யார் அவர்? எல்லாரும்!

ஒரு குடும்பம் பிரிவதற்கு காரணம் என்ன? இந்த குடும்பத்து தம்பதியினர் உடனே உத்தரவளிப்பது, “அவர் பொய் சொன்னார்!”; “அவள் திருடினாள்!”; “அவர் பொறுப்பில்லாதவர்!”; “எங்களால் எந்த ஒரு காரியத்திலேயும் ஒத்து போக முடியவில்லை!”; “அவள் முட்டாள் மற்றும் நெஞ்சழுத்தமுள்ளவள்!”; “என்னை அவர் மோசமாக நடத்தினார்!”

உண்மையிலே இப்படிப்பட்டதான தோல்விகளே பிரிவுக்கு காரணமா? திருமணமான தம்பதியினர் ஒவ்வொருவரும் இப்படிப்பட்டதான பிரச்சனைகளுக்காகவா விவாகரத்து பெற்றுக் கொள்கிறார்கள்? இதற்கு பதில் இல்லை என்பதுதான். எந்த ஒரு பாவம், குற்றம், தவறு அல்லது குறைவு இருந்தாலும் சிலர் அவைகளில் வாழ கற்றுக் கொண்டு திருமணத்தில் நிலைத்திருக்கிறார்கள்.

“அவைகளில் வாழ்வது” அல்லது “சகித்துக் கொள்வது” என்பதே பொறுமை, அல்லது நீடிய பொறுமையுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. இதைத்தான் நாம்

இந்த பாடத்தில் பேசிக் கொண்டு வருகிறோம்.

இருப்பினும், இந்த காரியத்தைக் குறித்து விஸ்தாரமாக பேசுவதற்கு முன்பு, நம்முடைய இந்த கலந்துரையாடலை பெரிதளவில் சூழ்நிலை பொருத்தம் பார்ப்போம்: முரண்பாட்டு தீர்வின் சூழ்நிலை பொருத்தம். குடும்பத்தில் ஏற்படும் முரண்பாட்டிற்கு எந்த விதமான தீர்வுகளை எடுக்க வேண்டும்? ஒரு நபர் ஏமாற்றமடைய செய்தால் அல்லது மற்றவரை காயப்படுத்தினால் அல்லது வாழ்க்கை துணைகள் மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்படும் போது எப்படி இந்த பிரச்சனையை தீர்வு செய்வது?

## வேதாகமம் முரண்பாடுகளுக்கு தீர்வுகாணும் வழிமுறைகளை கொடுக்கிறது

வேதவசனங்கள் இருவர் மத்தியில் இருக்கும் முரண்பாடுகளுக்கு தீர்வு வழங்கும் தேவனுடைய வழிமுறைகளை கொடுக்கிறது. இதை மேம்படுத்துவதற்கு ஒரே வழி முரண்பாடு எழுவதற்கு முன்பு நாம் அதை தடுத்து நிறுத்த வேண்டும்!

### முரண்பாட்டை தடை செய்வது

தடைசெய்வதே சிறந்த நிவாரணம். குடும்பத்தில் பிரச்சனைகளை தடை செய்வதற்கு ஒரு சில படிகள் என்ன? தடைசெய்வதற்கு உள்ளடக்கியது, முதலாவது, சரியான நபரை திருமணம் செய்து கொள்ளுவது - அடிக்கடி கருத்து வேறுபாடு இல்லாதவராய் இருக்கக்கூடிய ஒருவர். எப்படி ஒருவர் தான் சரியான வாழ்க்கை துணையை தேர்ந்தெடுக்கிறார் என்று நிச்சயித்துக் கொள்ள முடியும்? நான்கு யோசனைகள் உதவலாம்.

1. *ஒரு கிறிஸ்தவரை திருமணம் செய்ய வேண்டும்* - விசுவாசமுள்ள கிறிஸ்தவரை.

2. *ஒரு நல்ல மனிதரை திருமணம் செய்ய வேண்டும்* - சிந்தனை மிக்கவர், நற்குணம், மற்றும் அன்பு நிறைந்தவர், மற்றும் அக்கரை எடுத்துக் கொள்ளுபவர், பொறுப்புணர்ச்சி மிக்கவர், நேர்மையானவர்.

3. *உங்கள் தரப்பினர் (உங்களை சார்ந்த) எவரேனும் ஒருவரை திருமணம் செய்ய வேண்டும்*; இருவர் ஒரே பொதுவான தரப்பினராய் இருந்தால், அந்த திருமணம் வெற்றியாவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது.

4. எல்லாவற்றிக்கும் மேலாக, ஒரு அழகான பெண்ணைப் பார்த்தோ அல்லது அழகான ஆண்மகனைப் பார்த்தோ *"காதலில் விழுந்து"* திருமணம் *செய்யக் கூடாது.* வெளித் தோற்றத்தை கண்டோ அல்லது பாலினத் தோற்றத்தை வைத்து திருமணத்தை நிச்சயிப்பது என்பது நம்பிக்கையற்றதாகும்.

மேலும், முரண்பாட்டைத் தவிர்ப்பது என்பது ஒருவரை ஒருவர் மேன்மை யாகவும் சரியாகவும் நடத்துவதை உள்ளடக்கியதாகும். அது அன்புகூருவது, இரக்கம் மற்றும் நற்குணம் இவற்றை உள்ளடக்கியதாகும். திருமண பந்தத்தில் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கை துணையை திருப்திபடுத்துவதிலும் மற்றும் அவர்களுக்கு சேவை செய்ய தேர்ந்து கொண்டால் முரண்பாடு குறைவாகவே எழும்பும். மேலும், குடும்பத்தில் கணவன் மற்றும் மனைவிக்கு எது உண்மையோ, அதுவே மற்றவர்களுக்கும் அப்படியே ஆகும். பெற்றோர்கள்

தங்கள் பிள்ளைகளைச் சரியாக நடத்த வேண்டும் (காண்க எபேசியர் 6:4). பிள்ளைகள் ஒருவரை ஒருவர் சரியானபடி நடத்த வேண்டும். கிறிஸ்தவ கோட்பாடுகளை சரியான முறையில் செயல்படுத்துவதே முரண்பாட்டை தவிர்ப்பதற்கான சிறந்த வழியாகும்.

இப்படிப்பட்ட சிறப்பான முயற்சிகள் இருந்தாலும், முரண்பாடு எழும். பலசமயங்களில் ஒருவரையொருவர் காயப்படுத்துவதுண்டு. அப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும்?

## முரண்பாடுகளை கையாளுவதில் வேதாகம வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்

ஒருமுறை தவறு செய்தல் நடந்தாயிற்று, என்றால் அந்த தவறை சரி செய்வதற்கு வேதாகமம் என்ன போதிக்கிறதோ அவற்றை நாம் செய்ய வேண்டும். அடிப்படையில், குற்றம் செய்தவர் குற்றம் செய்யப்பட்டவரிடம் செல்ல வேண்டும் என்பதே வேதத்தின் தேவையாகும்.

*குடும்பத்திலுள்ள ஒரு நபர் மற்றொருவருக்கு எதிராக பாவம் செய்தால், தன்னிடம் குற்றம் உண்டு என்று உணர்ந்தவுடன் அவர் அந்த நபரிடம் சென்று பேச வேண்டியது அவருடைய கடமையாகும்* (மத்தேயு 5:23, 24). குற்றம் செய்த அந்த நபர் யாருக்கு விரோதமாய் பாவம் செய்தாரே அவருக்கு முன் செல்லும் போது அவர் என்ன செய்ய வேண்டும்? தன்னுடைய குற்றத்தை அறிக்கையிட வேண்டும் (யாக்கோபு 5:16அ)! இந்த அறிக்கையை எந்த ஒரு சாக்கும் சொல்லாமல் செய்ய வேண்டும் ("என்னை மன்னியுங்கள், ஆனால் நான் அதை செய்ததற்கு சரியான காரணம் இருந்தது") மற்றும் பதில்தாக்குதல் இல்லாமல் ("என்ன மன்னியுங்கள், ஆனால் நீங்கள் செய்ததும் தவறுதான்") செய்ய வேண்டும். அவர் தான் செய்தது தவறு என்றும் அதை ஒத்துக் கொள்கிறேன் என்றும் சொல்ல வேண்டும் - மற்றும் அவர் அதை செய்திருக்கக் கூடாது என்றும் சொல்ல வேண்டும் மேலும், அவர் உண்மையாகவே தான் வருந்துவதாகவும் மற்றும் மேற்கொண்டு அப்படிப்பட்ட காரியம் நடப்பதை தவிர்ப்பேன் என்றும் கூற வேண்டும். அப்பொழுது பாதிக்கப்பட்ட அந்த நபர் - யாருக்கு விரோதமாக குற்றம் செய்யப்பட்டதோ அவர் - இப்படி சொல்ல வேண்டும், "நான் உன்னை மன்னித்து விட்டேன்" மற்றும் அதை நேர்மையுடன் சொல்ல வேண்டும்.

எவரொருவர் பாவம் செய்திருந்தாலும் இந்த மாதிரியையே எப்பொழுதும் கடைப்பிடிக்க வேண்டும், பிள்ளைகள் ஒருவருக்கொருவர் தங்கள் பாவத்தை அறிக்கையிட வேண்டும்; பிள்ளைகள் தங்கள் பாவங்களைப் பெற்றோரிடம் அறிக்கையிட வேண்டும். பெற்றோர்களும் தங்கள் தவறுகளை பிள்ளைகளிடம் அறிக்கையிடவேண்டும். சான்றாக, பெற்றோர்கள் தவறு செய்யும் போது, அவர் அல்லது அவள் பிள்ளைகளிடம் சொல்ல வேண்டியது, "நான் உன்னிடம் செய்தது (அல்லது சொன்னது) தவறு, மற்றும் நான் அதற்காக வருந்துகிறேன்."

இந்த அறிக்கையிடுதலுக்குப் பிறகு, குற்றம் செய்தவரும் மற்றும் குற்றம் செய்யப்பட்ட இருவரும் ஒன்றாக இணைந்து ஜெபம் செய்ய வேண்டும். இந்த இருவரும் குற்றம் செய்தவருக்காக தேவன் தங்களுக்கு மன்னிப்பளிப்பார் என்ற விசுவாசத்தோடு தேவனிடத்தில் மன்னிப்பு கேட்கலாம்.

*ஒருவர் குடும்பத்திலிருக்கும் மற்றோருவர் தனக்கு விரோதமாக பாவம் செய்தார் என்று நம்பினால், அதற்கும் முரண்பாட்டுக்குத் தீர்வு இது போலவே*

*துவங்குகிறது; குடும்பத்திலுள்ள அந்த நபரிடம் செல்லவேண்டும் (மத்தேயு 18:15).* குற்றம் இழைக்கப்பட்ட நபர் குற்றம் செய்த நபரிடம் தனியே சென்று மற்றும் அந்த பிரச்சனைக்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டும். அவர் அதை முன் வைக்கும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும்; செய்யப்பட்ட குற்றங்களுக்காக ஒருவரை அணுகும்போது அணுகுமுறைக்கு நல்ல, மேலான, மற்றும் சிறந்த வழிகள் உண்டு. இதில் முக்கியமானது என்னவென்றால் சரியான பாதையில் செல்வது, சிறந்த சமயத்தை தெரிந்து கொள்வது, நாம் என்ன பேசப்போகிறோம் என்பதற்கு சரியான திட்டம் கொண்டிருப்பது, மற்றும் சரியான மனப்பாங்கு தேவை - ஆனால் முக்கியமானது என்னவென்றால் நாம் செல்ல வேண்டும்! மேலும், இவற்றை சீக்கிரமாக செய்ய வேண்டும். எபேசியர் *4:26 "சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது";* என்கிறது. திருமணமான தம்பதியினருக்கு சரியான சட்டம் என்ன வென்றால் *"கோபத்துடன் படுக்கைக்கு செல்லாதீர்கள்."*

## வேதாகம திட்ட அடிப்படையின் மூலம் முரண்பாட்டிற்கு தீர்வு ஏற்படவில்லை என்றால் என்ன நடக்கும்?

சில சமயங்களில் வேதத்தின் திட்ட அடிப்படையில் முரண்பாட்டிற்கு தீர்வு ஏற்படாது. அதாவது, சாந்தமான எதிர்த்தல் என்பது மற்ற நபரை மனந்திரும்பச் செய்யவோ அல்லது அவள் அல்லது அவரது குணாதிசயத்தை மாற்றவோ செய்யாது.

**ஏன் மக்கள் மாறமாட்டார்கள்?**

ஏன்? நாம், அவருடைய குற்றத்தைப் பற்றி பேசும்போது அவர் மாறவில்லை என்றால், அவர் பிடிவாதக்காரர் அல்லது குறும்பானவர் அல்லது தீங்கு செய்பவர் என நினைக்கக்கூடும். ஒருவேளை, கடிந்து கொள்ளுதலை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கு வேறு ஏதாவது காரணமாக இருக்கலாம்.

*மாற்றம் தேவை என்பதை ஒத்துக் கொள்வதில் தோல்வி.* அவர் மாறாமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பு என்னவென்றால் அவர் செய்வது ஒரு பிரச்சனை என்று அவர் ஒத்துக் கொள்வது இல்லை. தன் கணவர் அழுக்கான உடைகளை தரையிலேயே விட்டுச் செல்வதால் மனைவி வருத்தமடைகிறாள். அவள் அவருடைய உடைகளை அவரே எடுக்க வைக்க முயற்சி செய்தால், ஆனால் அவர் அந்த கோரிக்கைகளை நிராகரிக்கிறதாக காணப்படுகிறது. ஏன் அவர் மாறமாட்டார்? ஒருவேளை இருபது அல்லது முப்பது வருட பழக்கமாக இருக்கலாம். அதை உடைப்பது சற்று கடினமான காரியம். ஒருவேளை, அவர் வளரும் போது, எப்பொழுதும் அவரும் அவர் தகப்பனாரும் அழுக்கு உடைகளை தரையிலே போடுவதும் அவர் தாய் வந்து எல்லாவற்றையும் எடுத்திருக்கலாம். அவருடைய தாய் எல்லா அழுக்கான உடைகளையும் எடுத்துக் கொள்வது அந்தக் குடும்பத்தின் பழக்கமாக இருந்திருக்கும்போது, அவருடைய மனைவி அதையே செய்ய மறுக்கும்போது என்ன காரணம் என்று காணாமல் இருக்கலாம். ஒருவேளை அவர் தன்னுடைய சலவைத்துணிகளைப் பார்த்துக் கொள்ளுவது என்பது பெலவீனத்தின் அறிகுறியாக சிந்தித்திருக்கலாம்,

ஆண்மகனின் தோல்வி என்று நினைத்திருக்கலாம். எந்த காரணமாயிருந்தாலும், தன் அழுக்கு துணிகளை எடுப்பதற்கு அவர் சற்றும் ஒத்துக் கொள்ளவில்லை.

*மனித பெலவீனம்.* வேதத்தின் அடிப்படையில் அணுகியும் கூட ஒரு வாழ்க்கை துணை தன்னை மாற்றிக் கொள்வதற்கு முன்வரவில்லை என்றால், அவர் அல்லது அவள் பெலவீனமுள்ளவர் மற்றும் சோதனையை எதிர்க்கக்கூடாதவர் என்பது மற்றொரு காரணமாக இருக்கலாம். ஒரு வேளை அவர்கள் ஒரு குடிகார கணவன் அல்லது மனைவியாயிருக்கும் தருவாயில், மேலும் இதை விளக்கப்படுத்துவது எளிதான காரியமாயிருக்கும். மதுபானத்தினால் வருகிற பிரச்சனைகளை நாம் கண்டனம் பண்ணியோ, கடிந்து கொண்டோ அல்லது கெஞ்சிக் கேட்டுக் கொள்வதினாலோ தீர்ப்பு வராது. மதுபானத்திற்கு அடிமையானவர்கள் சிறந்த நோக்கத்தோடிருந்தார்களானாலும் அவர்கள் மீண்டும் மதுபானப் பழக்கத்தில் அவனோ அல்லது அவளோ விழுவதற்கு பலமான சாத்தியமுண்டு. குடிபழக்கத்தைப் போல அநேக பெலவீனங்கள் மேற்கொள்வதற்குக் கடினமாக இருக்கின்றன. குடும்பத்தில் யாராவது ஒருவர் தங்கள் கெட்ட நடக்கைகளை மாற்றவில்லை என்றால், அவர் அல்லது அவள் தங்களது தனிப்பட்ட பெலவீனத்தினால் பாவத்தின் பிடியிலிருந்து வெளிவருவது மிகவும் கடினமானதாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில், குடும்பத்திலிருப்பவர்கள் அந்த நபருக்கு உதவி தேவை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

**மக்கள் மாறாத போது என்ன செய்யலாம்?**

கணவன் மற்றும் மனைவி இருவரும் கிறிஸ்தவர்களானால், பின்பு வேதாகம அணுகுதல் வேலை செய்யும். அவர் சொல்லுவார், “நீ அப்படி நினைத்தால், நான் மாற்றிக் கொள்கிறேன்”; அவள் சொல்வாள், “நீங்கள் அது தவறு என்று நினைத்தால், நான் அதை மீண்டும் செய்ய மாட்டேன்.” இருந்தபோதிலும், வேதாகம வழிகளினால் மாறுதல் இல்லாமல் முரண்பாடு நீடித்திருக்குமானால் என்ன செய்யப்படக்கூடும்? அநேக வழிமுறைகளை உபயோகப்படுத்தலாம்.

*விடாது தொந்தரவு கொடுத்தல்?* இது 99 சதவீதம் உண்மை என்று குறித்து வைத்துக் கொள்ளலாம்; தொந்தரவு கொடுத்தலினால் பிரயோஜனம் இல்லை! ஒரு மனைவி சிந்திக்கலாம், “நான் தொடர்ந்து என் கணவரிடம் ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தால், அவர் ஒருவேளை மாறலாம்.” அதே சமயம், கணவர் இப்படி சிந்திக்கலாம், “என் மனைவி என்னை எந்த அளவிற்கு தொந்தரவு செய்கிறாளோ அந்த அளவுக்கு அவள் நினைப்பதை நான் செய்யக் கூடாது!” (மனைவி தன் கணவனுக்கு தொடர்ந்து ஆலோசனை வழங்குவது கணவனுக்கு தொந்தரவாக காணப்படும்.)

*விவாகரத்து?* அந்த பிரச்சனை எப்படியோ தீர்க்கப்பட முடியாமல் முரண்பாடு தொடர்ந்தால், அந்த தம்பதியினர் தங்கள் திருமணபந்தத்தை முறித்து விடலாமா? சில பிரச்சனைகள் சரிசெய்வதற்கு இயலாததாக காணப்படுகின்றன.

எனக்கு ஒரு மனிதரைத் தெரியும். பெரும்பாலான சமயம், அவர் தன் மனைவியை மரியாதையில்லாமல் நடத்துவார். அவளை எப்பொழுதும் கேலி செய்து அவளுடைய தனித்துவ சாயலை கீழித் தெரிந்தார். அந்த மனிதனை மாற்றமுடியவில்லை. அவள் என்ன செய்திருக்க வேண்டும்? அவள் அவனிடமிருந்து விவாகரத்து பெற்றிருக்க வேண்டுமா? சில பெண்கள் மற்றும்

ஆண்கள் குடிகாரத் துணையை திருமணம் செய்திருக்கிறதாகக் காண்கிறார்கள். அவர்கள் அதற்காக என்ன செய்ய முடியும் - குடிகாரத்துணையை விவாகரத்து செய்யலாமா? சில புருஷன் மற்றும் பெண்கள் பணத்தைப் பொறுத்தவரையில் பொறுப்பில்லாதவர்களாய் இருக்கிறார்கள்; அதன் முடிவு, அவர்கள் குடும்பம் எப்பொழுதும் பணத்திற்கு கஷ்டப்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் என்ன செய்ய வேண்டும்? விவாகரத்துதான் இதற்கு பதிலா? துரோகத்தைப் பற்றி என்ன? வேசித்தனஞ் செய்ததினிமித்தமே, விவாகரத்து அனுமதிக்கப்பட்டது ஆனால் அவசியமில்லை என்று வேதாகமம் போதிக்கிறது (மத்தேயு 19:9). விவாகரத்து ஒன்றே பதிலா அல்லது சிறந்த பதிலா? மன வியாதி உள்ளவர்களானால் என்ன செய்வது? ஒரு நபருக்கு மன வியாதி என்றால், மற்றவர் திருமணபந்தத்தை முடித்துக் கொள்ளவேண்டுமா?

இந்த கேள்விகள் எல்லாம் எளிதில் பதிலளிக்கக் கூடியவைகள் அல்ல, தங்கள் துணைகள் தவறு செய்வதை பொறுத்துக் கொள்ள தீர்மானிக்கிற போது. ஒரு கணவன் அல்லது மனைவி அஜாக்கிரதையான பாவத்தை தொடங்கலாம். சில சமயங்களில் உண்மையில் தங்கள் துணை உண்மையில்லாதவர்களாய் இருக்கும் போது - குறிப்பாக அவர் அல்லது அவள் தொடச்சியாக துரோகத்தை செய்யும் போது - தொடர்ந்து அவரோடு அல்லது அவளோடு வாழ்வது உண்மையில் சாத்தியமில்லாதது. ஒரு துணை சரீரப்பிரகாரமாக கொடுமைப்படுத்துகிறவராக இருக்கலாம்; உண்மையில், தேவன் இப்படி சீர்கெட்ட துணையோடு தொடர்ந்து வாழ்ந்து அபாயத்திற்கு உள்ளாக்குகிற வகையில் நாம் வாழ வேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை. இப்படிப்பட்ட காரியத்தில் அவர் அல்லது அவளின் சரீரம், மனது, அல்லது ஆவிக்குரிய ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்கு - ஒரு கிறிஸ்தவ மனைவி அல்லது புருஷன் தன் துணையை விட்டுப் போவதற்கு கட்டாயப்படுத்தப்படுகிறார்.[1] இருந்த போதிலும், கிறிஸ்தவ புருஷன் அல்லது மனைவி விவாகரத்தே முதலாவது அல்லது சிறந்த முடிவு என்று நினைத்து விடக் கூடாது. விவாகரத்து எப்பொழுதுமே தீங்கு ஆகும்; அது சில சமயங்களில் தேவையான தீங்காக இருக்கலாம், ஆனால் அது நல்லது என்று நிச்சயமாக பார்க்கக் கூடாது.

வாழ்க்கை துணை மாறாத போது, விடாது தொந்தரவு செய்தல் அல்லது விவாகரத்து ஒரு நல்ல தீர்வை கொடுக்கவில்லை என்றால் பின்பு நாம் என்ன செய்ய வேண்டும்? இந்த கேள்வி மீண்டும் நாம் தொடங்கின அந்த கருத்திடமே கொண்டு செல்கிறது.

## பொறுமை அல்லது நீடிய பொறுமை தேவைப்படலாம்

திருமணத்தில் முரண்பாட்டை வேறு ஏதும் தீர்க்கவில்லை என்றால், பொறுமை தேவை. "பொறுமை" என்றால் என்ன?

### "பொறுமை" என்பதன் அர்த்தம்

பவுல் அடிக்கடி உபயோகப்படுத்தும் கிரேக்க வார்த்தையான *makrothumia* வடிவத்தில் கலாத்தியர் 5:22ல் இதன் கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது சாதாரணமாக "நீடிய பொறுமை" என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இது நேரடி அர்த்தத்தில் "நீடிய குணம்" என அர்த்தப்படுகிறது. இந்த பதம் குறிப்பது "தன்னடக்கமான பண்பு, ஆத்திரமடையச் செய்யும் போது அது பழிவாங்கவோ அல்லது தண்டிக்கவோ செய்யாது."[2] இது *hupomene* என்ற மற்றோரு வார்த்தையோடு தொடர்புடையது, "பொறுமை" மற்றும் "சகிப்புத்தன்மை" அல்லது "நீடித்திருப்பது" என்று மொழிபெயர்க்கப்பட்டது. விசேஷமாக பிரச்சனைகள் வரும்போது தேவனை விட்டுப் பிரியக்கட்டாயப்படுத்தப்படும்போதும் நிலைத்திருப்பது. அது *anoche* என்ற இந்த வார்த்தைக்கும் தொடர்புடையது, இது பொதுவாக "சகிப்புத்தன்மை" என்று மொழிபெயர்க்கப்பட்டது. சில மொழி அதிகாரிகள் *makrothumia* என்பது "எதிரியான[3] ஒருவரிடம் பொறுமையைக் காண்பிப்பது" என்று அர்த்தப்படுகிறது என்கின்றனர்.

புதிய ஏற்பாட்டின்படி, (1) *தேவன் பொறுமை நிறைந்தவர், அல்லது நீடிய பொறுமையுள்ளவர்.* ரோமர் 2:4 "தேவனுடைய தயவு பொறுமை மற்றும் நீடிய சாந்தம் (பொறுமை)" ஆகியவை பற்றிப் பேசுகிறது (பார்க்கவும் 1 பேதுரு 3:20; 2 பேதுரு 3:9, 15). அப்படியே நாம் (2) *கிறிஸ்து பொறுமை நிறைந்தவர், அல்லது நீடிய பொறுமையுள்ளவர்* என்று வாசிக்கிறோம். பவுல் சொல்லும்போது பவுலின் மாற்றத்தில் "அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம் பெற்றேன்" என்கிறார் (1 தீமோத்தேயு 1:16). (3) கிறிஸ்தவர்களும், அதுபோல, பொறுமை உள்ளவர்களும், அல்லது நீடிய பொறுமையுள்ளவர்களாயிருக்க வேண்டும். இந்த காரியத்தில் மற்றதைப் போல, தேவனைப் பின்பற்றுகிறவர்களாய் (எபேசியர் 5:1) கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாய் (1 கொரிந்தியர் 11:1; 1 பேதுரு 2:21) இருக்க வேண்டும். எபேசியர் 4:1, 2 மற்றும் கொலோசெயர் 3:12, 13 ஆகிய இரண்டுமே கிறிஸ்தவர்கள் பொறுமையாய் அல்லது நீடிய பொறுமையாய் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது. எபேசியர் 4:1, 2 பொறுமையானது மனத்தாழ்மை மற்றும் சாந்தத்துடன் தொடர்பு படுத்தியும் மற்றும் "அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி"யும் என்கின்றது. கொலோசெயர் 3:12-14, ல் "பொறுமை உருக்கமான இரக்கம், தயவு, மனத்தாழ்மை, சாந்தம்," "ஒருவரையொருவர் தாங்கி" மற்றும் "ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" மற்றும் "அன்பைத்" தரித்துக் கொள்ளுங்கள் என்கிறது.

இந்த எல்லா கருத்துக்களையும் நாம் ஒன்றாய் சேர்க்கும்போது, நாம் கீழ்வருபவற்றை கற்றுக் கொள்ளுகிறோம்: இந்த வார்த்தை கோபமூட்டப்படும் போது தன்னடக்கமாயிருந்து நாம் பழிவாங்குவதையும் அல்லது தண்டிப்பதையும் தவிர்க்கிறதைப் பரிந்துரைக்கிறது. இவை நம்முடைய பகைவர்களிடம் பொறுமையாயிருப்பதற்கு உதவுகிறது. இது கோபத்திற்கு எதிர்மறையானது. இது தயவு, சகிப்புத்தன்மை, மன்னிப்பு மற்றும் அன்போடு தொடர்புடையது.

அதனால், நாம் பொறுமையுள்ளவர்களாய் இருந்து மற்றும் திருமணத்தில் அந்த விசேஷித்த குணத்தை நாம் காண்பிக்கும் போது, நாம் வெகு சீக்கிரத்தில் மன வருத்தம் அடையமாட்டோம். நாம் பழிவாங்கவோ அல்லது தண்டிக்கவோ மாட்டோம். அவர்கள் நம்மை எதிர்ப்பவர்களாய் இருந்தாலும் நாம் நம்முடைய துணைகளிடத்தில் அன்புகூருவோம். புருஷன் தன் மனைவியினிடத்தில் தயவு மற்றும் கிருபையை காண்பிப்பான். மனைவிகளும் தங்கள் சகிப்புத்தன்மை மற்றும் பொறுமையை காண்பித்து - தங்கள் புருஷனின் பெலவீனத்தையும் அல்லது பிரச்சனைகளையும் சகித்துக் கொள்ளவும் தயாராகிறார்கள்.

குடும்பத்திலுள்ள நபர்களும் மன்னிக்கிறவர்களாவார்கள். முரண்பாடு எழும்பும்போது எந்த ஒரு காரியமும் உதவாவிட்டாலும், பொறுமையோடு இருந்து அல்லது நீடிய பொறுமையோடிருந்தால் - அன்புகூருவதும், கிருபையாய் இருப்பதும், தயவுள்ளவர்களாகவும், சகிப்புதன்மையுள்ளவர்களாகவும், மற்றும் மன்னிக்கிறவர்களாகவும் இருந்தால் - உதவும்.

**பொறுமையை பயன்படுத்துதல்**

திருமணபந்தத்தில் இந்த பண்பைப் பயன்படுத்துவதற்கு, கிறிஸ்துவ துணையின் சிந்தனையில் இப்படிப்பட்டதான உரையாடல் நடந்து கொண்டிருப்பதாக கற்பனை செய்துகொள்ளுங்கள்.

| *பொறுமையில்லாத சிந்தனை* | *வேதத்தின் அடிப்படையில் சிந்தனை* |
|---|---|
| *“அவனுடைய நோக்கம் என்னை தொந்தரவு செய்வதுதான்!”* | *“நீ நியாயத்தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களை நியாயம் தீர்க்காதே!”* |
| *“நான் முடிந்த அளவுக்கு அவரோடு சேர்ந்து வாழ்வதற்கு முயற்சி செய்தேன், ஆனால் முடியவில்லை; நான் விவாகரத்து பெறப்போகிறேன்.”* | *“நீங்கள் இவற்றை முயற்சி செய்தீர்களா? பொறுமை?”* |
| *“ஆனால் அவர் அதற்கு தகுதி யானவர் அல்ல!”* | *சகிப்புத்தன்மை? மன்னிப்பு?”* |
| *“ஆனால் அவனுடைய நடத்தை எனக்கு மிகவும் துக்கத்தை ஏற்படுத்துகிறது!”* | *“நாம் தேவனிடத்தில் மன்னிப்பும், நீடிய சாந்தத்தையும் பெறுவதற்கு தகுதியானவர்களா?”* |
| *“நான் என் துணையை எந்த சூழ்நிலையிலும் விவாகரத்து செய்யக் கூடாது என்று சொல்லுகிறீர்களா?”* | *“இயேசு சொன்னார், ‘தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்.’ ”* |
| *“ஆனால் பல முறை எனக்கு அவர் குற்றம் செய்திருக்கிறார்!”* | *“ஏழெழுபது தரம் - அதற்கும் மேலாக மன்னித்திருக்கிறீர்களா?”* |
| *“நான் அவரை வெறுக்கிறேன்!”* | *“சத்துருக்களை சிநேகியுங்கள்.”* |

இந்த விவரவாசகம் விவாகரத்து எப்பொழுதுமே தவறு என்று குறிப்பதற்கு கொடுக்கப்பட்டது அல்ல. மாறாக கிறிஸ்தவர்களாகிய நாம், வாழ்க்கை துணையின் தோல்வி அல்லது பாவங்களால், விவாகரத்தைக் குறித்து எந்தவிதமான

*தீர்க்கமான முடிவு எடுப்பதற்கு முன் கவனமாக சிந்திக்க வேண்டும் என்பதற்கு உதவுவதே இதன் நோக்கம்.*

**பொறுமையின் மதிப்பு**

ஒருவேளை நாம் மிகுந்த நீடிய பொறுமையோடு, அல்லது பொறுமையோடிருந்து நம் வாழ்க்கை துணையின் குற்றங்களோடு வாழ நாம் கற்றுக்கொள்ள தீர்மானித்திருக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். எப்படி இந்த காரியம் திருமண வாழ்க்கையை பாதிக்கும்?

*நீடிய பொறுமையாயிருப்பதற்கு ஒரு மதிப்பு உண்டு:*

*(1) நாம் சாந்தத்தோடு இருக்கும் போதும் மற்றும் மன்னிக்கும்போதும் மேலான மக்களாய் மாறுகிறோம்.* நாம் தேவனைப் போல கிறிஸ்துவைப்போல ஆகிறோம்.

*(2) நாமும் சந்தோஷமான மக்களாய் மாறுகிறோம்,* நாம் நமக்கு மாத்திரமே பொறுப்பானவர்களாக இருக்க தீர்மானித்திருக்கிறோம், நம்முடைய வாழ்க்கை துணைக்கு அல்ல. நம்முடைய வாழ்க்கை துணை செய்யும் காரியத்தினால் நாம் சோர்ந்துபோகும்போது, நாம் பொறுப்புகளை அவர்களுக்காகவும், நமக்காகவும் ஏற்றுக்கொள்கிறோம், நாம் அந்த பொறுப்பை நிராகரிக்க வேண்டும். இந்த முறையில், நாம் ஒவ்வொருவரும் நம்முடைய நித்திய முடிவுக்கு அவன் அல்லது அவள் சொந்த பொறுப்பாளி என்று அங்கிகரிக்கிறோம்.

*(3) நம்முடைய வாழ்க்கைத் துணை சிறந்தவர்களாய் ஆகக்கூடும்.* இங்கு முரண்பட்டது போலிருந்தாலும் இது உண்மையான கூற்று. நாம் பொறுமை யோடு இருக்க வேண்டுமானால், நம்முடைய துணையை மாற்ற முடியாது என்று தீர்மானிக்க வேண்டும். ஒரு துணையை அன்பாக நடத்த எடுத்த தீர்மானத்தினால் அந்த துணை மாறக்கூடும் (எப்போதும் இல்லாவிட்டாலும்).

*(4) நம்முடைய குடும்பம் சிறந்த குடும்பமாக இருக்கும்.* நாம் சற்று எளிதாக இருந்து, நம்முடைய துணைக்கு சுதந்திரம் கொடுக்கும்போது, மற்றும் தொந்தரவு செய்வதை விட்டுவிட்டால், முரண்பாடு குறைவாக இருக்கும், அதன் விளைவாக வாழ்க்கை சந்தோஷமாகும்.

*(5) மிக முக்கியமானது, நாம் மன்னிக்கும் போது, நமக்கும் தேவனிடத்தில் மன்னிப்பு கிடைக்கும்!* நம் எல்லாருக்கும் மன்னிப்பு தேவை.

## முடிவுரை

நாம் பொறுமையோடு அல்லது நீடிய பொறுமையோடு இருந்தால் திருமண வாழ்வில் நிலைத்திருக்கும் தன்மையை உருவாக்குகிறதற்கு உதவும் என்று சொன்னோம். உங்கள் திருமண வாழ்வில் முரண்பாடு வருகிறபோது, அதனை ஆவிக்குரிய முறையில் தீர்க்க முயற்சிசெய்யுங்கள். இருந்தபோதிலும் சில முரண்பாடுகளை முற்றிலுமாக தீர்க்க முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அப்போது உங்களுடைய கிறிஸ்தவ மார்க்கம் சோதிக்கப்படுகிறது; அப்பொழுது உங்கள் பொறுமையின் தன்மை மிகவும் முக்கியமானது ஆகும்.

பின்பு ஏன் நீங்கள் பொறுமையாய் இருக்க வேண்டும்? நம்முடைய மூல விரவாசகத்தை சற்றே திரும்பிப்பார்த்து முற்றும் இந்தவழியே பார்க்கலாம்:

*திருமண வாழ்க்கையில் நிலைத்திருக்கும் தன்மையில் நம்பிக்கை வைப்பது பொறுமை உருவாகுவதற்கு உதவும். திருமணம் என்பது நிரந்திரமானது என்று முற்றிலுமாக நீங்கள் நம்பினால், நீங்கள் திருமணத்திற்கு தெரிந்து கொண்டவர்கள் மேல் பொறுமையாயிருப்பதற்கும் மற்றும் மன்னிப்பதற்கும் கற்றுக் கொள்ளுவீர்கள் - ஏனென்றால் நீங்கள் அப்படித்தான் செய்யவேண்டும்!*

---

*குறிப்புகள்*

[1]*சில சமயங்களில் புருஷன் அல்லது மனைவி தங்கள் துணையை கட்டாயத்தினால் பிரிவது என்பது அவர் அல்லது அவள் விவாகரத்திற்கு பிற்பாடு, மறுமணம் செய்ய உரிமை கொண்டுள்ளனர் என்பதல்ல.* [2]*"நீடிய பொறுமை என்பது ... கோபத்திற்கு எதிரானது மற்றும் தயவோடு இணைந்திருப்பது, மற்றும் தேவனுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது, யாத்திராகமம் 34:6,* LXX, *ரோமர் 2:4,* I *பேதுரு 3:20. பொறுமை என்ற பண்பு சூழ்நிலைகளுக்கு அடிபணியாதது அல்லது பிரச்சனைகளுக்கு இரையாகாதது; அது மனச் சோர்வுக்கு எதிரானது மற்றும் நம்பிக்கையோடு இணைந்திருப்பது ..."* (C. F. Hogg and W. E. Vine, *The Epistles to the Thessalonians* [N.p.: 1914; reprint Grand Rapids, Mich.: Kregel Publications, 1959], 183-84). [3]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 247.